©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 271] CHENNAI, FRIDAY, AUGUST 19, 2011
Aavani 2, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம்.**

**விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், வேலியந்தல் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. எண் அ3/1595/2008/உ.இ.(ஊ)]*

**No. VI(2)/424(a-1)/2011.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 205, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் தினசரி வருகைப் பதிவேட்டில் கூடுதலாக ஆட்களை சேர்த்து நிதி முறைகேடு செய்து ஊராட்சி மன்றத் தலைவர் என்னும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்திய விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், வேலியந்தல் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி க. விமலா என்பவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

**விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், மேல் அருங்குணம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. எண் அ3/4097/2007/உ.இ.(ஊ)]*

**No. VI(2)/424(a-2)/2011.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 205, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ஏரி மற்றும் குளம் மேம்பாடு பணி மேற்கொண்டதாக பயனாளிகளின் கையொப்பத்தினை போலியாக தினசரி வருகை பதிவேட்டில் பதிவு செய்து ரூ. 63,440/– கையாடல் செய்து விதிமுறைகளை மீறி அரசுக்கு இழப்பு ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டமைக்காக செஞ்சி ஊராட்சி ஒன்றியம், மேல் அருங்குணம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி ச. செந்தமிழ்செல்வி என்பவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

**விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், எ. சாத்தனூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. எண் அ3/6017/2006/உ.இ.(ஊ)]*

**No. VI(2)/424(a-3)/2011.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 205, உட்பிரிவு 11—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஊராட்சி நிதியில் செலவுச்சீட்டோ, துணைச் செலவுச்சீட்டோ ஏதுமின்றி ஊராட்சி பொதுநிதியிலிருந்து ரூ. 19,51,559/— செலவு செய்து இழப்பு ஏற்படுத்தியமைக்காக உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், எ. சாத்தனூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. க. சத்தியமூர்த்தி என்பவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

**விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், எ. சாத்தனூர் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. எண் அ3/6017/2006/உ.இ.(ஊ)]*

**No. VI(2)/424(a-4)/2011.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 206, உட்பிரிவு 11—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஊராட்சி நிதியில் முறையான செலவுச்சீட்டோ, துணைச் செலவுச்சீட்டோ ஏதுமின்றி ஊராட்சி பொதுநிதியிலிருந்து தொகை எடுக்கும்போது காசோலைகளில் கூட்டுக் கையொப்பமிட்டு ரூ. 19,51,559/— செலவு செய்து இழப்பு ஏற்படுத்தியமைக்காக உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், எ. சாத்தனூர் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திருமதி த. அம்பிகா என்பவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

விழுப்புரம்,
2011 ஆகஸ்ட் 18.

**கா.த. மணிமேகலை,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.